**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SC No. 110 /2023**

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

அ.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மாதாராமன் | த/பெ.: | சங்கரன் |
| கிராமம்: | தலைக்காடு, கண்ணன்மேடு | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாயம் |
| வயது: | 48 | முகவரி: | தலைக்காடு, கண்ணன்மேடு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 24.01.2025

**முதல் விசாரணை:_**

ஆஜர் எதிரிகளை தெரியும். நான் தலைக்காடு கண்ணன்மேடு கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். 27.10.2022 நீர்நிலை ஆக்கிரமிப்பை அரசு வருவாய் துறை மூலமாக எடுக்கொண்டிருந்தார்கள். அன்று காலையில் நான் திருத்துறைப்பூண்டிக்கு சென்றுவிட்டேன். மாலை சுமார் 06.30 மணியவில் திருத்துறைப்பூண்யிலிருந்து கொற்கை வழியாக எனது இருசக்கர வாகனத்தின் பதிவு எண். TN 51 – K 4763 என்ற வண்டியில் சென்றுக்கொண்டிருந்தேன். வேனுகோபால் வீட்டிற்கு முன்பாக வரும்போது எனது சட்டை மேல்பாக்கெட்டில் வைத்திருந்த நோக்கியா செல்போனை பிடுங்கி கீழே போட்டு உடைத்து குச்சிகாரி மவனே, தேவுடியா மவனே உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டி

எனது இருசக்கர வாகனத்தை கட்டையால் அடித்தார். பின்னர் நான் சிறு துாரம் நடந்து எனது வீட்டிற்கு சென்றபோது அண்ணாதுரை மகன் ரமேஷ் என்பவர் கருவர மரத்தடியில் இருந்து ஒரு கம்பியால் என்னை கழுத்தின் இடது புறத்தில் அடித்து தேவுடியா மவனே, குச்சிகாரி மவனே என கூறி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினார். பின்னர் எதிரி ரமேஷ் என்பவர் நான் அணிந்திருந்த மேல்சட்டையை கழற்றி கிழித்து எனது கையை கட்டினார். பின்னர் நான் அணிந்திருந்த ஆடைகளை எல்லாம் கழற்றிவிட்டு நிர்வானமாக வைத்து என்னை ரோட்டில் இழுத்து சென்றார் அப்போது எனக்கு காலில் காயம் ஏற்பட்டது. நான் என்னை விட்டுவிடு என்று சொன்னேன். அப்போது எதிரி ரமேஷ் என்பவர் அவர் வீட்டிலிருந்து இரும்பு கடப்பாரையை எடுத்து வந்து எனது இடதுகால் தொடையில் குத்தி இரத்த காயம் ஏற்படுத்தினார். நான் வலி தாங்க முடியாமல் அதிகமாக சத்தம்போட்டேன். பின்னர் ரமேஷ் என்னை ரோட்டில் இழுத்து கொண்டு போய் வேனு என்பவரின் வீட்டு வாசலில் போட்டார். வேனு மகன்களான ஜனார்தன் மற்றும் தமிழ் மைந்தன் ஆகியோர்கள் என்னை இழத்துகொண்டு போய் பக்கத்திலிருந்த பள்ளமான வயலில் என்னை கீழே தள்ளினார்கள். வேனு என்பவர் கட்டையால் எனது வலது மற்றும் இடது தோள்பட்டையில் அடித்தார்கள். வேனுவின் மகன்களான ஜனார்தனன் மற்றும் தமிழ் மைந்தன் ஆகியோர்கள் கட்டையால் என்னை அடித்தார்கள். யாரும் என்னை காப்பாற்ற கூடாது என்றும் என்னை வீட்டிற்கு போக கூடாது என சொன்னார்கள். பின்னர் அடிப்பட்டதால் மயக்கம் அடைந்துவிட்டதால் எனது மனைவியும், சரவணன் என்பவரும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருத்துறைப்பூண்டி

அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவத்தின்போது** எதிரிகள் என்னை தாக்க பயன்படுத்திய சவுக்கு உருட்டு கட்டை(66 செ.மீ) நீளமுடையது. **அது சா.பொ.1 ஆகும்**. எதிரிகள் என்னை தாக்கிய சவுக்கு கட்டை(96 செ.மீ) நீளமுடையது. **அது சா.பொ.2 ஆகும். எதிரிகள்** குடும்பத்தார் மூலமாக எனக்கு எப்போது வேண்டுமானாலும் ஆபத்து வரும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.